


திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் சம்பந்தமாக மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிறப்புரையாற்றினார். இதில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## தந்தை பெரியார் 148வது பிறந்த நாள்!

# கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை 8.30 மணிக்கு அண்ணா சாலை, சிம்சன் அருகே அமைந்துள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கிறார்!

## சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் 148வது பிறந்த நாளை முன்னிட்டு 17.9.2026 அன்று காலை 8.30 மணிக்கு அண்ணா சாலை, சிம்சன் அருகே உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாண்புமிகு கழகத் தலைவர் தளபதி **மு.க.ஸ்டாலின்**, பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் **டி.ஆர்.பாலு மற்றும் முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள்** உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

நாள்: 12.09.2026

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

## கரூர் மாவட்டம் முழுவதும்

# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி அறிக்கை!



கரூர் .செப்.14.

கரூரில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில், அவர்களின் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ்மொழி உயர்வுக்காகவும் . தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை , கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்'' என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு , நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் “மெட்ராஸ் ஸ்டேட்'' என்ற பெயரை “தமிழ் நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் சுய மரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 118 வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2026 செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் கரூர் மாவட்ட கழக அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று கரூர் ரவுண்டானா பேரறிஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

அது சமயம் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகரம், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் – செங்கல்பட்டில்

# முதல்வர் விஜய்யை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்! 5 ஆயிரம் பேர் திரண்டனர்!

## மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் தலைமை! கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு சிறப்புரை!

காஞ்சிபுரம், செப். 14 –

சட்டமன்றத்தில் முதல்வர் விஜயின் அடாவடி – ஆணவப் பேச்சைக் கண்டித்து செங்கல்பட்டில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் கலந்துகொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள். முடிவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு கண்டன உரையாற்றினார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மிகவும் அருவெறுக்கத்தக்க வகையில் சட்டமன்ற மாண்புகளை மீறி, மறைந்த தலைவர்களை களங்கப்படுத்தும் வகையில் பேசிய முதல்வர் விஜயின் அடாவடி – ஆணவப் பேச்சைக் கண்டித்து செங்கல்பட்டு, பழைய பேருந்து நிலையம் அருகில் மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் – முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு கண்டன உரையாற்றினார்.

செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ். ஆர்.ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ் மணி, எல்.இதயவர்மன், வி. என்.பி.வெங்கட்ராமன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச் செழியன், க.அன்புச்செல்வன், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் பி.டி.சி.ஜி.செல்வராஜ், இரா.பொன்னுராம், ஆதிமாறன், அ.தமிழ்மாறன், என். நவீன், சாய்ஜெய்காந்த் பாரதி, ஆர்.எஸ்.கிருத்திகா தேவி, ஒன்றியச் செயலாளர்கள் எஸ். டி.கருணாநிதி, ந.கோபால், ஏ. வந்தேமாதரம், ஆப்பூர் பி.சந்தானம், ஜி.கே.ரவி, எம்.டி லோகநாதன், திருமுடிவாக்கம் இ.மணி, கே.பி.ராஜன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், டி.பாபு, எஸ்.ஜபருல்லா, கோ. சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், ஆர்.சதீஷ்குமார், த. வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி. யுவராஜ்,

பகுதி கழகச் செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த. ஜெயக்குமார், பெருங்களத்தூர் எஸ். சேகர், எஸ்.இந்திரன், டி.காமராஜ், மாடம்பாக்கம் ஆ.நடராஜன், ஏ.கே.கருணாகரன், இரா.சுரேஷ், இ.எஸ்.பெர்னாட்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ். கே.இப்பிராகிம், ஆர்.டி.பூபாலன், எம்.ஆர்.சீனிவாசன், ஆர்.எஸ்.சங்கர், க.தேவேந்திரன், எஸ்.சதீஷ், கே.எத்திராஜ், எம்.செல்வகுமார், மா.கணேஷ்பாபு, சே.அருள்தேவி, இரா. பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு மற்றும் எம்.கஜனா (ஏ) கஜேந்திரன், துரை சண்முக மணிகண்டன், மனோகரி சண்முகம்

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி பிரகாஷ், தையூர் வீ.விஜயகுமார், கோ.ஜானகிராமன், உதயா கருணாகரன், எஸ். ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவராஜ், பா.ஞானபிரகாசம், சசிகலா, பொன்.ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி. ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், தி.க.பாஸ்கரன், டி.எஸ். எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், முகலிவாக்கம் தங்கம் வாட்ஸ், ஆர்.ஆர். ஜெயராம்மார்த்தாண்டம், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ. சத்தியபிரபு உள்ளிட்ட கழகத்தினர் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று சிறப்பித்தனர்.

## அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜயின் ஆணவப் பேச்சை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## கழக சட்டதிட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் பங்கேற்பு!

அரியலூர்,செப்,14

அரியலூர் மாவட்ட திமுக சார்பில் அரியலூர் மாவட்ட கழக செயலாளர், முன்னாள் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர். குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். சிவசங்கர் வழிகாட்டுதலின் படி சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், லதா பாலு, மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, ஆர்.எம்.அன்பழகன்,வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய கழகப் பொறுப்பாளர்கள் இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரே.அசோக சக்கரவர்த்தி, கோ.அறிவழகன், ஆர். கலியபெருமாள் வி. எழில்மாறன், தனவேல், இரா. அண்ணாதுரை, தெய்வ.இளையராஜா, கே.ஜி .எஸ். முருகன் கணேசன், இரா, செந்தில்குமார், பொன். செல்வம்,

வீர.சிவா, நகரக் கழக செயலாளர்கள் இரா,முருகேசன், வெ.கொ. கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் கோபால கிருஷ்ணன், அல்போன்ஸ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எஸ். ஆர்.இராமராஜன், க.தர்மதுரை, ஆதி. இளங்கோவன், பானுமதி ராஜேந்திரன், மீனா சாமிநாதன், இரா. ரவிக்குமார், க.கருப்புசாமி, வை.முருகானந்தம், தலைமை கழக பேச்சாளர்கள் கவிஞர்.வீரமுரசு, இளஞ்செழியன், பழ.புனிதம்,

செ. இளஞ்செழியன்,ம. ஜெயக்குமார், க.அருண்ராஜா, இளங்கோவன், இரா.குலோத்துங்கன், ஜோ.வின்செண்ட் ராஜா, அரியலூர் நகர கழக நிர்வாகிகள் இராஜேந்திரன், மாலா. தமிழரசன், குணா, ராமு, சண்முகம், குமார், மணிவண்ணன், உத்திராபதி,

ஜெயங்கொண்டம் நகர கழக நிர்வாகிகள் இராஜமாணிக்கம், மு.முரசொலி குமார், பா.வீனஸ்.இரமேஷ், கு.பிரபாகரன், மா.செ.செந்தில்குமார், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் கதிர், இளம்பரிதி, இராணி, சிவ.இரமேஷ், சு. வசந்தபகலவன், செல்வ.பிரபாகரன், எஸ்.ஆர். முருகேசன், இலக்கியதாசன், பாலமுருகன், தமிழழகி, கழக நிர்வாகிகள் சரவணன், நடராஜன், குமரவேல், மருதை.விஜயன், செ.வெற்றிவேலன், ஆனந்த், ப.பாஸ்கர், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் சுமார் 1000 க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

## தாராபுரம் ஆலோசனைக் கூட்டம்!

திருப்பூர், செப்.14-

தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் தவகல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல. பத்மநாபன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ்,

கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர், முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கலந்து கொண்டு சிறப்புரையாற்றி னார்.

இதில் உடன் கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை மற்றும் இணைச் செயலாளர்கள், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை ந.பூ.இராமஜெயம்

### செப்டம்பர் 14 (2007)



இளமைக்காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

வட்ட மற்றும் பகுதி அவைத் தலைவராகவும் பின்னர், பகுதிக் கழகச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1996ஆம் ஆண்டு மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்து நாளிதழ் தொழிற்சங்கத்தில் தொடர்ந்து 35 ஆண்டுகள் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

“நான் மதிக்கின்ற, போற்றுகின்ற, புகழ்கின்ற, பாராட்டுகின்ற, என்நெஞ்சில் வைத்து நினைத்து மகிழ்கின்ற ஒரு தொண்டன் ராமஜெயம்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.கிட்டு (எ) கிருஷ்ணன்

### செப்டம்பர் 14 (2017)



திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கியவுடன் அதில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

1957ல் பேராசிரியர் அன்பழகனார் அவர்களைஅழைத்து வந்து அம்மாபேட்டை கிளைக் கழகத்தை உருவாக்கி அப்பகுதியில் கழகத்தை வளர்த்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**